# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 06 ( PW– 06 )** |
| **பெயர்** | :– | **கலைச்செல்வன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் என்னேகோடு கிராமத்தில் வசிக்கிறேன். நான் சுயத்தொழில் செய்கிறேன். எதிரிகள் பிரகாஷ் என்கிற சிவபிரகாஷ், சுரேஷ்குமார், ரவி என்கிற ரவிக்குமார் ஆகியோரை எனக்குத் தெரியாது. வழக்கு சம்பவம்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழுங்கப்பட்டது.**

நான் சேலத்தில் கட்டட பொறியாளர் சங்கத்தில் Electrician ஆக வேலை செய்தேன் என்றால் இல்லை. சேலம் பெரிய புதூரை சேர்ந்த மணி என்கிற இளம் முருகனை எனக்குத் தெரியாது. அவர் பழைய வாகனங்கள் வாங்கி விற்கும் தொழிலும் நிலம் வாங்கி விற்கும் தொழிலும் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. இளம் முருகனும் கமலகண்ணனும் நெருங்கிய நண்பர்கள் என்றும் நான் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 25.04.2016 மாலை 05.00 மணியளவில் இளம் முருகன் என்னை கைப்பேசியில் அழைத்து புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள சரவணபவன் உணவு விடுதிக்கு எதிரில் வருமாறு அழைத்தார் என்றால் சரியல்ல. நான் அங்கு சென்றேன் என்றால் சரியல்ல. அங்கு இளம் முருகனுடன் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட ஆரிஸ், சபிக் ஆகியோர் இருந்தனர் என்றும் அதே நேரத்தில் கமலக்கண்ணன் என்பவரும் அவருடைய இருச் சக்கர வாகனத்தில் வந்தார்

என்றும் நானும் இளம் முருகனும் கமலக்கண்ணனும் மேற்படி ஆரிஸ், சபிக் ஆகியோரை அழைத்துக்கொண்டு 03 சாலை பக்கம் உள்ள ஜென் மோட்டார்ஸ் என்ற வாகன பழுது பார்க்கும் இடத்திற்கு சென்றோம் என்றும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீல நிற Shift Car-யை ஆரிஸம், சபிக்கும் காட்டி விற்பனைக்கு பேசிக்கொண்டுள்ளதாகவும் அப்பொழுது இளம் முருகனுக்கு ஒரு கைப்பேசி அழைப்பு வந்ததாகவும் அதில் கோபமாக பேசிக்கொண்டு அவர் கொண்டு வந்த இருச் சக்கர வாகனத்தில் வேகமாக முக்கிய சாலையை நோக்கி சென்றதாகவும் நானும் கமலக்கண்ணனும் உடனடியாக வண்டியை எடுத்துக்கொண்டு உடனடியாக சென்றதாகவும் அவர் முக்கிய சாலை சந்திக்கும் இடத்தில் எங்களுக்கு ஏற்கனவே தெரிந்த மேட்டூரை சேர்ந்த பிரகாஷ் என்கிற சிவபிரகாஷ் என்பவருடன் மேலும் 06 நபர்கள் இளம் முருகனை வழிமறித்து கையில் வெட்டியதாகவும் வண்டியை கொண்டு அந்த இடத்திலேயே சத்தம் போட்டுக்கொண்டே கீழே விழுந்ததகாவும் பின்னர் சுதாரித்து எழுந்து ஜென் பட்டறை நோக்கி ஓடியதாகவும் அப்போது பிரகாஷ் அவரை விராதீங்க வெட்டி கொன்றுவிடுங்கள் என்று சொன்னதாகவும் பட்டறைக்கு முன்னால் மறித்து இளம் முருகனின் கழுத்து, கை, தலை, முதுகு ஆகிய இடங்களில் எல்லோரும் சேர்ந்து மாறிமாறி வெட்டினார்கள் என்றும் இரத்த வெள்ளத்தில் தடுமாறி விழுந்துவிட்டார் என்றும் தடுக்க வந்தவர்களை சேலம் மாவட்டமே என் பெயரை கேட்டால் அலறும் என்றும் என்கிட்டயேவா என்று சொல்லி யாராவது பக்கம் வந்தால் உங்களையும் போட்டி தள்ளிவிடுவேன் என்று கத்தியை காட்டி மிரட்டியதாகவும் அவர்கள் வந்த இருச் சக்கர வாகனத்தில் வேகமாக போய்விட்டதாகவும் காவல் துறையினர் விசாரணையில்

சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பற்ற வேண்டி உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.